நகராட்சி அலுவலகம்,
களக்காடு.
நாள். 08.10.2025.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2025ம் வருடம் அக்டோபர் மாதம் 16ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>16.10.2025</td><td>648</td><td>
<u>மன்றப் பொருள். 01</u><br>
தமிழ்நாடு அரசு நான்கு ஆண்டு சாதனைகளாக களக்காடு நகராட்சிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்து தினசரி நாளிதழ் மற்றும் தொழில்மலர்களில் விளம்பரம் வெளியிட்ட வகைக்கு கீழ்க்கண்டாவறு பட்டியல் தொகை கோரப்பட்டுள்ளது. இத்தொகையினை சம்பந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழ் பெயர்</th><th>பட்டியல் எண் மற்றும் நாள்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>உள்ளாட்சி சாரல் மாதவரம், சென்னை.</td><td>Bill No. 563, நாள். 08.07.2025</td><td>9975</td></tr>
<tr><td>2.</td><td>தினமலர்</td><td>Invoice No. TV-3667, Dated 30.09.2025</td><td>12600</td></tr>
<tr><td>3.</td><td>மாலை முரசு</td><td>NA-2526-0442, Dated 27.09.2025</td><td>9900</td></tr>
<tr><td>4.</td><td>தினகரன்</td><td>Bill No. 3300574861, Dated 27.09.2025</td><td>9828</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>42303</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.
</td><td>அலுவலகக் குறிப்பின்படி அரசு விதியை பின்பற்றி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 16.10.2025 | 649 | **<u>மன்றப் பொருள். 02</u>**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்தில் இ-சேவை மையம் புதிதாக அமைக்க தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் நிருவாக இயக்குநர், அவர்களின் கடிதம் எண். ITS-1-3140801/2025/ELCOT-06, நாள். 27.06.2025ன்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி அலுவலகத்தில் மேற்படி இ-சேவை மைய கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ. 6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பின்படி அரசு விதியை பின்பற்றி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 16.10.2025 | 650 | **<u>மன்றப் பொருள். 03</u>**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்புகை பிரிவில் அஞ்சல்கள் அனுப்புகை செய்வதற்கு அஞ்சல் வில்லைகள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. அதன் பொருட்டு 2025-2026 ஆம் நிதியாண்டுக்கு ரூ. 30,000/- செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம். | அரசு விதிப்படி செலவிட அனுமதிக்கப் படுகிறது. |
| 16.10.2025 | 651 | **<u>மன்றப் பொருள். 04</u>**<br>களக்காடு நகராட்சி சொந்தமான ஈப்பு வாகனம் TN72CV2781 - ஐ பொதுபராமரிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் மேற்படி வாகனத்தினை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பராமரிப்பு பணிகள் முடிவடைந்து அப்பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு வழங்க கோரப்பட்டுள்ளது. | அலுவலக குறிப்பின்படி அரசு விதியினை பின்பற்றி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>ஈப்பு வாகன எண்.</th><th>பராமரிப்பு செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>பட்டியல் தொகை</th></tr>
<tr><td>TN72CV 2781</td><td>டெரிக் மோட்டார்ஸ் (பி) லிட், 7/147-A1 நாகர் கோவில் ரோடு, திருநெல்வேலி.</td><td>ரூ.1,05,889/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து எண்ணூற்றி எண்பத்தி ஒன்பது மட்டும்)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:
வாகன பராமரிப்பு அவசர அவசியத்தினை முன்னிட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைத்ததை ஒப்புக்கொள்ளலாம். மேற்படி வாகன பராமரிப்பு செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>652</td>
<td>
<u>மன்றப் பொருள். 05</u>
களக்காடு நகராட்சி பொதுநிதியின் கீழ் 2025-2026 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளுக்கு 07.08.2025 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிற்கிணங்க கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத் தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="3">1.</td><td rowspan="3">களக்காடு நகராட்சி அலுவலகத்தில் முக்கிய இடங்களில் CCTV கேமிரா மற்றும் அதன் சார்ந்த மின்னனு சாதனங்கள் சப்ளை செய்து நிறுவுதல்.</td><td rowspan="3">1.00</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>1.92% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>ஹரி டிஜிட்டல், புதுக்கோட்டை</td><td>4.04% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.03, கீழப்பத்தையில் உள்ள பொது கிணற்றினை தூர்வாரி சீரமைக்கும் பணி.</td><td rowspan="2">1.00</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>14.49% கூடுதல்</td></tr>
<tr><td>3.</td><td>களக்காடு நகராட்சி வார்டு எண். 6ல் உள்ள</td><td>1.50</td><td>திரு.J. ஜஸ்டின் பிரதீப்</td><td>35.11% கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>பதினைந்து (15) கவுன்சிலர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் எதிர்வரும் மன்றக் கூட்டத்தில் தெளிவாக பொருள் சேர்க்கவும்.</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | சமுதாய கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல். | | திருமதி. N.M.புஷ்பம் | 0.02% குறைவு |
| 4. | களக்காடு நகராட்சி கோவில்பத்து பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான காலை உணவு திட்ட பொது சமயலறை கூடத்தில் பராமரிப்பு பணிகள். | 1.60 | திரு.J. ஜஸ்டின் பிரதீப் | 2.15% கூடுதல் |
| | | | திருமதி. N.M.புஷ்பம் | 0.11% குறைவு |
| 5. | களக்காடு நகராட்சி வார்டு எண்.02 மஞ்சுவிளை காந்தி நகர் தெற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 9.00 | திரு.J. ஜஸ்டின் பிரதீப் | 0.11% குறைவு |
| | | | திருமதி. N.M.புஷ்பம் | 3.42% கூடுதல் |

**அலுவலக குறிப்பு:**

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

---

16.10.2025 | 653

**மன்றப் பொருள். 06**

களக்காடு நகராட்சியில் ஆதார் சேவை மையம் அமைக்க வேண்டும் என தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் இயக்குநர், கடித எண். ITS-13140801/2025/Elcot-06, நாள்.27.06.2025 -ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் ரூ.6.00 இலட்ச மதிப்பீட்டில் ஆதார் இ-சேவை மையம் கட்டும் பணியினை மேற்கொள்ள 21.08.2025 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிற்கிணங்க கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சி அலுவலக வளாகத்தில் இ- | 6.00 | திரு. A. இராதா கிருஷ்ணன் | 5.90% கூடுதல் |

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.N.M. புஷ்பம் அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>சேவை மையம் (ஆதார்) கட்டும் பணி.</td><td></td><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>0.06% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஒப்புக்கொள்ளலாம், பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை பின்னேற்பு செய்யலாம், இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>654</td>
<td>
<u>மன்றப் பொருள். 07</u>
களக்காடு நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்களின் காப்பீட்டு காலம் 10.08.2025 அன்றுடன் முடிவடைவதால் காப்பீட்டினை புதுபிக்க கீழ்கண்டவாறு வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீட்டுத்தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஈப்பு வாகன எண்.</th><th>காப்பீட்டுத்தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>TN72CV 2767</td><td>12836</td></tr>
<tr><td>2.</td><td>TN72CV 2781</td><td>12852</td></tr>
<tr><td>3.</td><td>TN72CV 2718</td><td>25096</td></tr>
<tr><td></td><td>மொத்தம் ரூ.</td><td>50784</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td>அரசு விதிப்படி செலவிட அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>16.10.2025</td>
<td>655</td>
<td><u>மன்றப் பொருள். 08</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, கோட்டை விஸ்வகர்மா தெருவில் உள்ள சிறுபாலம் சேதம் அடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாகவும் ஆபத்தாகவும் உள்ளதால் அதனை சீர் செய்யும் பணிக்கு ரூ.75000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:<br>மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியமாதலால் இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளவும், இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td>
<td>பதினைந்து (15) கவுன்சிலர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் இந்த பொருளை தெளிவாக எதிர்வரும் மன்றக் கூட்டத்தில் பொருள் சேர்க்கவும்.</td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>656</td>
<td><u>மன்றப் பொருள். 09</u><br>களக்காடு நகராட்சியில் 2025-2026 ஆம் நிதியாண்டில் மாநில நிதிக்குழு (பள்ளிகள் பராமரிப்பு மற்றும் அங்கன்வாடி மையங்கள் பராமரிப்பு மான்யத்) திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9733/2025/SS-2, நாள்.25.07.2025 -ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையங்களை பராமரிப்பு செய்ய ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்ட அங்கன்வாடி மையங்களை சீரமைப்பு செய்ய 22.08.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத் தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்குட்பட்ட மேலப்பத்தை அங்கன்வாடி, மஞ்சுவிளை அங்கன்வாடி, கீழப்பத்தை அங்கன்வாடி (தெற்கு) வடமலைசமுத்திரம் அங்கன்வாடி, கீழக்கருவேலன்கு ளம் அங்கன்வாடி</td><td rowspan="2">24.50</td><td>திரு. J.ஜஸ்டி ன் பிரதீப்</td><td>1.84% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்ப ம்</td><td>0.01% குறைவு</td></tr>
</table></td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய N.M.புஷ்பம் அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>ஆகிய அங்கன்வாடி மையங்களை பராமரிப்பு செய்யும் பணி.</td><td></td><td></td><td></td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்குட்பட்ட பெருமாள் சன்னதி அங்கன்வாடி, கக்கன்நகர் அங்கன்வாடி, ஆத்தங்கரை அங்கன்வாடி, கோவில்பத்து தேவர் தெரு அங்கன்வாடி ஆகிய அங்கன்வாடி மையங்களை பராமரிப்பு செய்யும் பணி.</td><td rowspan="2">20.50</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்</td><td>2.37% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>0.02% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>657</td>
<td>
<u>மன்றப் பொருள். 10</u>
களக்காடு நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ்கண்ட வாகனங்களுக்கு காப்பீடு காலம் முடிவடைந்துள்ளதால் காப்பீட்டினை புதுப்பிக்க அங்கீகரிக்கப்பட்ட நேஷனல் இன்சூரன்ஸ் காப்பீட்டு நிறுவனத்திற்கு கீழ்கண்டவாறு தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஈப்பு வாகன எண்.</th><th>காப்பீட்டுத் தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>TN72AU3639<br>(விலங்குகள் பிறப்பு கட்டுபாட்டு வாகனம்)</td><td>18508</td></tr>
<tr><td>2.</td><td>TN72DZ9676<br>(கழிவு நீர் உறிஞ்சும் வாகனம்</td><td>47309</td></tr>
<tr><td></td><td>மொத்தம் ரூ.</td><td>65817</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி மேற்படி தொகை செலுத்தியதனை பின்னேற்பு செய்யலாம்.
</td>
<td>அரசு விதிப்படி செலவிடவும்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>16.10.2025</td>
<td>658</td>
<td>
<u>மன்றப் பொருள். 11</u>
களக்காடு நகர்மன்றத்தில் நகர்மன்ற தலைவர்களாக பதவி வகித்தவர்களின் பெயர் விபரம் மற்றும் தலைவர், ஆணையர் பெயர் பலகைகள் அமைக்கும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் 12.08.2025 அன்று பெறப்பட்டது. இவ்விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.)</th><th>விலைபுள்ளிதாரர்</th><th>தொகை (ரூ.)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகர்மன்றத்தில் நகர்மன்ற தலைவர்களாக பதவி வகித்தர்வர்களின் பெயர் பலகை மற்றும் ஆணையர், தலைவர் குறித்த பெயர் பலகைகள் அமைக்கும் பணி.</td><td rowspan="2">10,000/–</td><td>திருமதி. என்.எம் புஷ்பம்</td><td>10,000/–</td></tr>
<tr><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்</td><td>12,000/–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>659</td>
<td>
<u>மன்றப் பொருள். 12</u>
களக்காடு நகராட்சி வார்டு எண். 07, கீழக்கருவேலன்குளம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள சிறுநீர் கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு பெற விண்ணப்பிக்கப்பட்டதில் சம்பந்தப்பட்ட மின் வாரிய கேட்புபடி ரூ.6910/– செலுத்த வேண்டியுள்ளது. இத்தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு:</u>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td>பதினைந்து நகர்மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அடுத்த மன்ற பொருளில் தெளிவாக வைக்கவும்.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 16.10.2025 | 660 | **<u>மன்றப் பொருள். 13</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களில் மீன்பாசி உரிமம் மற்றும் மரங்களில் மகசூல் அனுபவிக்கும் உரிமம் தொடர்பாக 12.08.2025 அன்று பொது ஏலம்/மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அவற்றில் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ரூ. 17,766/ஐ வழங்க மன்று அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 892/2025/அ1) | அனுமதிக்கப்பட்டது. |
| 16.10.2025 | 661 | **<u>மன்றப் பொருள். 14</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட புல எண்.685/1ல் அமைந்துள்ள குடிதாங்கி குளத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025–2026ன் கீழ் தூர்வாரி சீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு தூர்வாரும் பணிகளின்போது சேகரமான மண்ணை அப்புறப்படுத்த உரிய அனுமதி வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கனிமவள மாவட்ட அலுவலரை கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தந்த நகர்மன்றங்களுக்கு உட்பட்ட நீர் நிலைகளை பராமரிக்கும்போது வெளியேற்றம் செய்ய வேண்டிய மண்ணை அந்தந்த நகர்மன்றங்களே வணிக நோக்கமின்றி வெளியேற்றம் செய்வதற்கான அனுமதியினை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட குடிதாங்கி குளத்தில் சேகரமாகியுள்ள மண்ணை இந்நகராட்சிக்குட்பட்ட தாழ்வான பகுதிகள் சாலைகள், மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றினை கண்டறிந்து அங்கு பயன்படுத்திக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959 விதி எண்.13ல் (திருத்தப்பட்டது 09.05.2022) –ன்படி நகராட்சிகளுக்குட்பட்ட நீர் நிலைகளை பராமரிக்கும்போது வெளியேற்றம் செய்யப்பட வேண்டிய சிறு கனிமவளங்களுக்கு (மண் மற்றும் மணல்) நகர்மன்றங்களே உரிய அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட தாழ்வான பகுதிகளை | மாவட்ட ஆட்சியர் மற்றும் கனிம வள அதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்று மண் எடுக்க அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | கண்டறிந்து அப்பகுதிகளில் மேற்கண்ட நீர் நிலையில் தூர்வாருதல் மூலம் சேகரிக்கப்பட்ட மண்ணை பரப்பும் வகையில் வெளியேற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.10.2025 | 662 | <u>**மன்றப் பொருள். 15**</u><br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 32658/ஆர்1/2023, நாள்.27.12.2023, கடிதத்தில் சொத்துவரியுடன் கல்வி வரி விதிப்பு ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மிகாமல் வரிவிதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது, எனவே அதனை நகர்மன்றத்தில் பொருள் வைத்து இறுதி முடிவின் மீது அரசின் ஆணை பெறுவதற்கு முழுமையான வடிவில் செயற்குறிப்பினை அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>களக்காடு நகராட்சி எல்லைக்குள் மொத்தம் 20 பள்ளிகள் உள்ளன. அவற்றில் நகராட்சிக்கு சொந்தமான ஒரு நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் ஒரு நகராட்சி நடுநிலைப்பள்ளியும் உள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் சத்துணவு மையங்கள் அடிக்கடி சேதமடைந்து வருவதால் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் சீரமைப்பு செய்யப்பட நிதி தேவைப்படுவதால் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் கல்விவரி விதிப்பு செய்வது அத்தியாவசியமாக உள்ளது.<br>சொத்துவரியுடன் கல்வி வரியினை 5 விழுக்காடு வரி விதிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண் 416, நாள். 08.02.2024ல் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காடு கல்வி வரி விதிக்க மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>எனவே, இதன் தொடர்ச்சியாக விதிகளில் வகுத்துள்ளவாறு தினமணி நாளிதழில் 27.02.2024-ல் பொதுமக்களின் ஆட்சேபணை கோரி விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டு, உரிய காலவரையறைக்குள் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணை வரப்பெறாத காரணத்தினால் நகர்மன்ற தீர்மான எண். 494, நாள். 30.08.2024-ல் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 0.5 விழுக்காட்டில் வரிவிதிப்பு செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. வரி விகிதம் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அத்தீர்மானத்தை ரத்து செய்யவும், அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் | அரசாணைப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | 16.05.2025 தேதிய நினைவூட்டும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, கல்வி வரி விதிப்பு குறைந்தபட்சம் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 2.5 விழுக்காடுக்கு குறையாமலும், 5 விழுக்காடுக்கு மிகாமலும் கல்வி வரிவிதிப்பு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறைந்தபட்சம் சொத்து வரி ஆண்டு மதிப்பில் 2.5 விழுக்காடுக்கு கல்வி வரி விதிப்பு செய்திட மன்ற அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண் 25/2024/அ1) | |
| 16.10.2025 | 663 | **மன்றப் பொருள். 16**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் உள்ள பழுதுகளை சீரமைக்க நகராட்சி நிருவாக மண்டல இயக்குநரகத்தின் தூய்மை பாரத இயக்கக அலுவலர்களால் 23.07.2025 அன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், களக்காடு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மும்முனை மின் இணைப்பு பெறும் வகையில் வயரிங் செய்யப்படவும் ரூ.1,75000-க்கு (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம். அத்தியாவசிய மற்றும் அவசர பணியாதலால் இப்பணியினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புக்கொள்ளலாம். | அரசு விதிப்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>16.10.2025</td>
<td>664</td>
<td>

**<u>மன்றப் பொருள். 17</u>**

களக்காடு நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2025–2026ன் கீழ் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரூபி.ஆர்.மனோகரன் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் திட்ட அலுவலர் திருநெல்வேலி அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 19.09.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத் தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி 3வது வார்டில் ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டாருடன் கூடிய Mini OHT அமைத்தல்.</td><td rowspan="2">3.00</td><td>திரு. வி.முருகையா பாண்டியன்</td><td>0.59% கூடுதல்</td></tr>
<tr><td>திரு. எம். அய்யம் பெருமாள்</td><td>0.07% குறைவு</td></tr>
</table>

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எம்.அய்யம் பெருமாள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>665</td>
<td>

**<u>மன்றப் பொருள். 18</u>**

களக்காடு நகராட்சியில் ஒரு மாற்றுத் திறனாளி நபரை நகர்மன்ற நியமன உறுப்பினராக தேர்வு செய்வதற்கு நகராட்சிப் பகுதி பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அறியும் வண்ணம் தினத்தந்தி நாளிதழ் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான தொகை வழங்கக் கேட்டு Elegant Publicities என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டவாறு வரப்பெற்ற பட்டியலின்படி, தொகை ரூ.56123/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

<table>
<tr><th>வ.எண்.</th><th>நாளிதழின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தினத்தந்தி</td><td>4700</td></tr>
<tr><td>2.</td><td>தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்</td><td>48750</td></tr>
<tr><td>3.</td><td>மதிப்பு கூட்டுவரி (GST) (5%)</td><td>2673</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>56123</td></tr>
</table>

</td>
<td>அரசு விதியின்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br>களக்காடு நகராட்சிப் பகுதி மாற்றுத்திறனாளிகள் அறியும் வண்ணம் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.10.2025 | 666 | **<u>மன்றப் பொருள். 19</u>**<br>களக்காடு நகராட்சியின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களின் கழிவுநீர், கழிப்பறை கழிவுநீர் சேகரித்தல், கொண்டு செல்லுதல், அகற்றுதல், ஒழுங்குப்படுத்துதல் மற்றும் அபராதம் விதித்தலுக்கு கசடு கழிவு மேலாண்மை விதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X-a பிரிவு 199 அத்தியாயம் XI அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, மேற்படி சட்டத்தின் மீதான ஆட்சேபணைகள் இருப்பின் பொதுமக்களின் கருத்துக்களை தெரிவிப்பதற்கு 03.08.2025 அன்று தினத்தந்தி தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரத்திற்கான பட்டியல் தொகை ரூ.11054/- ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. |
| 16.10.2025 | 667 | **<u>மன்றப் பொருள். 20</u>**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்திற்கு தினமணி செய்தி நாளிதழ் 01.01.2024 முதல் 31.07.2025 வரை 19 மாதங்களுக்கு வழங்கிய வகைக்கு மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.275 வீதம் மொத்தம் ரூ.5205/- ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | அரசு விதிப்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. |
| 16.10.2025 | 668 | **<u>மன்றப் பொருள். 21</u>**<br>சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவின்படி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-இன்படி, நகராட்சி எல்லைக்குள் தொழில் வர்த்தகம் மற்றும் வணிகம் செய்யும் நிறுவனங்களுக்கு தொழில் உரிமம் வழங்குவதற்கு விதி எண்.289, பிரிவு (1), | அரசு விதியின்படி செலவினம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | (2), (5) மற்றும் (7) அட்டவணை I, II, III மற்றும் IV –இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆண்டு ஒன்றிற்கு குறைந்த பட்சம், அதிகபட்சம் கட்டணங்கள் நிர்ணயம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் உரிம கட்டணத்தை 2025–2026 ஆம் ஆண்டு முதல் வசூல் செய்ய ஏதுவாக மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அச்சு பதிப்பகம் பக்கம் ஒன்றிற்கு தொகை ரூ.3000/– வீதம் 17 பக்கங்களுக்கு தொகை ரூ.51000/– மட்டும் அரசு கணக்கு தலைப்பில் [03001–Directorate of Stationery & Printing, Account Code: 005800200AA23902] செலுத்தவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>நகராட்சியின் வருவாயினை பெருக்கும் விதமாக நகராட்சி எல்லைப் பகுதியில் உள்ள வணிக நிறுவனங்கள், தொழில் வர்த்தகம் மற்றும் இதர நிறுவனங்களுக்கு தொழில் உரிம கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க ஏதுவாக மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டியுள்ளதால், அச்சுக்கட்டணம் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.10.2025 | 669 | **<u>மன்றப் பொருள். 22</u>**<br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகளின் கீழ் 27 வார்டுகளிலும், தூய்மை பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மொத்தம் 234 தெருக்கள் (நீளம் 72.993) உள்ளது. 12242 குடியிருப்புகள் மற்றும் 2197 வணிக நிறுவனங்களில் வீடு தோறும் மக்கும் மற்றும் மக்காத குப்பை கழிவுகளை சேகரித்து மக்கும் குப்பை கழிவுகளை வளமீட்பு பூங்காவிற்கு கொண்டு சென்று உரமாக்கப்பட்டு விவசாய நிலங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. குப்பை கழிவுகளை முதல்நிலை சேகரம் செய்ய விதிக்கப்பட்ட அளவுகளின்படி, 80 தள்ளுவண்டிகள் தேவைப்படுகிறது. தற்போது 60 தள்ளுவண்டிகள் உள்ளது. இதில் 20 தள்ளுவண்டிகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள வாகனங்கள் பழுதடைந்துள்ள நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. பழுதடைந்த வாகனங்களில் பழுது நீக்கம் (டயர், பேரிங், வர்ணம் பூசுதல் மற்றும் இதர பாகங்கள்) செய்வதற்கு உத்தேச தொகை | அலுவலக குறிப்பின்படியும், அரசு விதிகளின்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ.4,25,000/– மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிப் பகுதியினை தூய்மையாக வைத்திருப்பதற்கு வீடுகள் தோறும் குப்பைகள் சேகரம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த தள்ளுவண்டிகள் பழுதடைந்துள்ளதால், தூய்மை பணியாளர்களுக்கு பணியில் காலதாமதம் ஏற்பட்டது. பணியாளர் நலன் மற்றும் தூய்மை பணியினை கருத்திற்கொண்டு வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.10.2025 | 670 | **<u>மன்றப் பொருள். 23</u>**<br>களக்காடு நகராட்சியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாடு வாகனம் (TN72AU3639) மூலம் தெருக்களில் சுற்றித் திரியும் ஆண் மற்றும் பெண் நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி செலுத்தவும் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கும் நாய்களை பிடித்து கால்நடை மருத்துவமனைக்கு அல்லது நகராட்சியின் மூலம் கட்டப்பட்டுள்ள அறுவை சிகிச்சை மையத்திற்கு கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் இவ்வாகனத்தின் நான்கு டயர்களும் சேதமடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. தற்போது தமிழக அரசு அறிவிப்பின்படி, தெரு நாய்களை பிடித்து வெறி நோய் தடுப்பூசி செலுத்தவும், கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் டயர்களை மாற்றம் செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.12208/– ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>தமிழக அரசு உத்தரவின்படி, தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை மற்றும் வெறி நோய் தடுப்பூசி செலுத்த வேண்டியுள்ளதால், நாய்களை பிடித்து செல்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனத்தினை பராமரித்து வைக்க வேண்டியுள்ளதால், நான்கு டயர்களை மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம் | அரசு விதியினை பின்பற்றி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td>16.10.2025</td>
<td>671</td>
<td>

**<u>மன்றப் பொருள். 24</u>**

பொது (முதல்வரின் முகவரி)த் துறை அரசாணை எண்.390, நாள். 19.06.2025 –ன்படி, உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்டத்தின் மூலம் களக்காடு நகராட்சி 27 வார்டு பொதுமக்கள் அரசின் சேவைகள் எளிய முறையில் கிடைத்திட 13 துறைகள் மூலம் வழங்கப்படும் 43 சேவைகள் பெற்று பயன் பெறும் வகையில் 15.07.2025 முதல் 07.10.2025 வரை 11 முகாம்கள் நடத்துவதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட கால அட்டவணையின்படி 3 இடங்கள் தேர்வு செய்து கீழ்கண்ட இடங்களில் முகாம்கள் நடைபெற்றது. மேற்படி முகாம்களுக்கு (ஒவ்வொரு முகாமிற்கு மண்டப வாடகை மற்றும் சுத்தம் செய்ததற்கான கூலி உட்பட ரூ.8500/–) மொத்தம் ரூ.93500/– ஒப்பந்ததாரரால் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>முகாம் நடைபெற்ற தேதி</th><th>முகாம் நடைபெற்ற இடம்</th><th>மண்டப வாடகை</th><th>சுத்தம் செய்ததற்கான செலவு</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1.</td><td>15.07.2025</td><td rowspan="4">ராஜம் திருமண மண்டபம், கீழக்கருவேலன்குளம், களக்காடு.</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>2.</td><td>23.07.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>3.</td><td>29.07.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>4.</td><td>07.08.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>5.</td><td>13.08.2025</td><td rowspan="5">வேலு பெஸ்ட் திருமண மண்டபம், மகாத்மா காந்தி வீதி, களக்காடு.</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>6.</td><td>20.08.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>7.</td><td>26.08.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>8.</td><td>02.09.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>9.</td><td>04.09.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>10.</td><td>10.09.2025</td><td rowspan="2">அருணா திருமண மண்டபம், வியாசராஜபுரம் சேனையர் தெரு, களக்காடு.</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td>11.</td><td>31.10.2025</td><td>8000</td><td>500</td><td>8500/-</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>88000</td><td>5500</td><td>93500/-</td></tr>
</table>

மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

</td>
<td>அரசு விதியினை பின்பற்றி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 16.10.2025 | 672 | **<u>மன்றப் பொருள். 25</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16390/2024/பிபிசி, நாள். 27.05.2025ன்படி, களக்காடு நகராட்சிப் பகுதியில் கடந்த நான்கு ஆண்டுகளாக நடந்து முடிந்த பணிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகளின் சிறப்பு செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் நகராட்சியின் மையப்பகுதியில் விளம்பரம் பலகை அமைத்து விளம்பரம் செய்த வகைக்கு தொகை ரூ.7500/- ஐ (ரூ.3750 x 2) நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16390/2024/பிபிசி, நாள். 27.05.2025ன்படி, களக்காடு நகராட்சிப் பகுதியில் 2021-2022 முதல் 2025-2026ம் ஆண்டு வரை நடைபெற்ற திட்டப்பணிகளை விளம்பரம் செய்தமைக்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதியின்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. |
| 16.10.2025 | 673 | **<u>மன்றப் பொருள். 26</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, ஜவஹர் வீதியில் அமைந்துள்ள 12 கடை கட்டிடங்கள் மற்றும் வார்டு எண்.20, வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் அமைந்துள்ள 16 கடை கட்டிடங்கள் என மொத்தம் 28 கடை கட்டிடங்களை மாத வாடகை முறையில் குத்தகைக்கு ஒப்படைத்தல் தொடர்பாக 10.10.2025 அன்று பொது ஏலம் / மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.20,135/- ஐ வழங்க மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2265/2025/அ1) | அரசு விதியின்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 16.10.2025 | 674 | **<u>மன்றப் பொருள். 27</u>**<br>களக்காடு நகராட்சியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாடு வாகனத்திற்கு (TN72AU3639) 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கு மோட்டார் வாகன தரச்சான்று பெற வேண்டியுள்ளதால், இவ்வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச செலவினம் ரூ.35000/- ஆகும். | அரசு விதியின்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>தமிழக அரசு உத்தரவின்படி, தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை மற்றும் வெறி நோய் தடுப்பூசி செலுத்த வேண்டியுள்ளதால், நாய்களை பிடித்து செல்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனத்தினை பராமரித்து வைக்க வேண்டியுள்ளதால், பழுதுநீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.10.2025 | 675 | **<u>மன்றப் பொருள். 28</u>**<br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகளின் கீழ் 27 வார்டுகளிலும், தூய்மை பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மொத்தம் 234 தெருக்கள் (நீளம் 72.993) உள்ளது. 12242 குடியிருப்புகள் மற்றும் 2197 வணிக நிறுவனங்களில் வீடு தோறும் மக்கும் மற்றும் மக்காத குப்பை கழிவுகளை சேகரித்து மக்கும் குப்பை கழிவுகளை வளமீட்பு பூங்காவிற்கு கொண்டு சென்று உரமாக்கப்பட்டு விவசாய நிலங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. குப்பை கழிவுகளை முதல்நிலை சேகரம் செய்ய விதிக்கப்பட்ட அளவுகளின்படி, 11 மின்கல வாகனங்கள் தேவைப்படுகிறது. இதில் 2 மின்கல வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள வாகனங்கள் பழுதடைந்துள்ள நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. பழுதடைந்த வாகனங்களில் பழுது நீக்கம் (டயர், பேரிங், மின்கலன்(பேட்டரி), வர்ணம் பூசுதல் மற்றும் இதர பாகங்கள்) செய்வதற்கு உத்தேச தொகை ரூ.5,42,540/- மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிப் பகுதியினை தூய்மையாக வைத்திருப்பதற்கு வீடுகள் தோறும் குப்பைகள் சேகரம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த மின்கல வாகனம் பழுதடைந்துள்ளதால், தூய்மை பணியாளர்களுக்கு பணியில் காலதாமதம் ஏற்பட்டது. பணியாளர் நலன் மற்றும் தூய்மை பணியினை கருத்திற்கொண்டு வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதியினை பின்பற்றி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td>16.10.2025</td>
<td>676</td>
<td>

**<u>மன்றப் பொருள். 29</u>**

பொது (முதல்வரின் முகவரி)த் துறை அரசாணை எண்.390, நாள்.19.06.2025–ன்படி, உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்டத்தின் மூலம் களக்காடு நகராட்சி 27 வார்டு பொதுமக்கள் அரசின் சேவைகள் எளிய முறையில் கிடைத்திட 13 துறைகள் மூலம் வழங்கப்படும் 43 சேவைகள் பெற்று பயன் பெறும் வகையில் 15.07.2025 முதல் 07.10.2025 வரை 11 முகாம்கள் நடத்துவதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட கால அட்டவணையின்படி 3 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு முகாம்கள் நடைபெற்றது. மேற்படி முகாம்கள் நடைபெறும் நாட்கள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ விளம்பரம், திரை விளம்பரம் மற்றும் குடிநீர் வசதி, கலந்து கொள்ளும் அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் தேவையான உணவு, தேநீர் போன்ற வசதிகளும் செய்து கொடுத்த வகைக்கு மூன்று ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு. கீழ்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>திருமதி.என்.எம். புஷ்பம்</th><th>திரு.ஜா. ஜஸ்டின் பிரதீப்</th><th>பரமேஸ்வரி காண்ட்ரக்டர்ஸ்</th></tr>
<tr><td colspan="5">முகாம் ஒன்றிற்கான செலவு</td></tr>
<tr><td>1.</td><td>LED திரை விளம்பரம்</td><td>18500</td><td>19500</td><td>20500</td></tr>
<tr><td>2.</td><td>ஆட்டோ விளம்பரம்</td><td>5000</td><td>6000</td><td>6500</td></tr>
<tr><td>3.</td><td>உணவு, தேநீர் மற்றும் குடிநீர் (உணவின் விலை x நபரின் எண்ணிக்கை)</td><td>23800 (140x170)</td><td>25500 (150x170)</td><td>30600 (180x170)</td></tr>
</table>

**<u>அலுவலக குறிப்பு</u>:**

தமிழக முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் கிடைப்பதற்கு நகராட்சியின் மூலம் முகாம் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளதால், முகாமிற்கு தேவையான அனைத்து செலவினங்களையும் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அரசு விதியினை பின்பற்றி செலவினம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கின்றது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>16.10.2025</td>
<td>677</td>
<td>

**<u>மன்றப் பொருள். 30</u>**

களக்காடு நகராட்சியானது 01.11.2021 முதல் தரம் உயர்த்தப்பட்ட நாளிலிருந்து சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் இதர வருவாய் இனங்கள் UTIS மென்பொருளில் வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. இதற்கான ஒப்புகை ரசீது Dot Matrix என்ற அச்சுப்பொறி மூலம் அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வலுவலகத்தில் ஒரு Dot Matrix Printer மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் அடிக்கடி பழுது ஏற்பட்டு ரசீது வழங்குவதில் காலதாமதம் ஆகிறது. எனவே, புதிதாக ஒரு Dot Matrix அச்சுப்பொறியும் மற்றும் இவ்வலுவலகத்தில் அலுவலகக் கோப்புகள் நகல் எடுப்பதற்கு போதிய வசதி இல்லாததால், திட்டக்கருத்துருக்கள் மற்றும் மன்றக்கூட்ட பொருள்கள் போன்றவற்றை ஒளி நகல் எடுத்து குறித்த நேரத்திற்குள் அனுப்ப இயலாத நிலை உள்ளது. இதனால் காலதாமதம் ஏற்பட்டு பணிகள் தொய்வடைகிறது. எனவே, இவ்வலுவலகத்திற்கு புதிதாக ஒரு நகலெடுக்கும் இயந்திரம் (XEROX MACHINE) வாங்குவதற்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>திருநெல்வேலி ஸ்ரீ காமாட்சியம்மன் உலோகத் தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.</th><th>திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.</th><th>மணிமுத்தாறு பெண் காவல் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.</th></tr>
<tr><td>1.</td><td>அச்சுப்பொறி (Printer) கொள்முதல் செய்தல். (Epson LQ 310 Dot Matrix Printer)</td><td>1</td><td>31,000</td><td>31,250</td><td>32,500</td></tr>
</table>

</td>
<td>அலுவலக குறிப்பின்படி கோரிக்கையினை ஏற்று அரசுவிதியின்படி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>நகலெடுக்கும் இயந்திரம் (Xerox Machine) Kyrocera MZ 32001 Xerox Machine</td><td>1</td><td>1,99,000</td><td>1,99,500</td><td>2,05,000</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
களக்காடு நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் இதர வருவாய் இனங்கள் வசூல் செய்தல் மற்றும் திட்ட மதிப்பீடுகள், மன்றக்கூட்ட பொருள்கள் நகல் எடுத்தல் போன்ற பணிகளில் காலதாமதம் ஏற்படாமல் இருக்கவும், நிர்வாக நலன் கருதி ஒரு அச்சுப்பொறி மற்றும் ஒரு நகலெடுக்கும் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>678</td>
<td>
<u>மன்றப் பொருள். 31</u>
களக்காடு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0–ன் கீழ் நீர்வள மேலாண்மை பணிகளுக்கு 2023–2024ம் ஆண்டு புதிதாக கழிவுநீர் சேகரிப்பு வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வாகனத்தின் மூலம் நகராட்சிப் பகுதி மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் கழிவுநீர், செப்டிக் டேங்க் கழிவுகளை சேகரம் செய்து அப்புறப்படுத்துவதற்கு வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>குடியிருப்பு</td><td>3000/–</td></tr>
<tr><td>2.</td><td>வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள்</td><td>3500/–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
பொது சுகாதாரப் பயன்பாடு மற்றும் கழிவு நீர் வாகன பராமரிப்பிற்காக வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 16.10.2025 | 679 | **<u>மன்றப் பொருள். 32</u>**<br>களக்காடு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0–ன் கீழ் நீர்வள மேலாண்மை பணிகளுக்கு 2023–2024ம் ஆண்டு புதிதாக கழிவுநீர் சேகரிப்பு வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வாகனமானது குறுகலான தெருக்களில் செல்ல இயலாது. இத்தெருக்களில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள கழிவு நீரை உறிஞ்சி எடுப்பதற்கு தேவையான உறிஞ்சிக்குழாய்கள் கொள்முதல் செய்வதற்கும், இக்குழாய்களை வாகனத்துடன் எடுத்து செல்வதற்கு கழிவுநீர் தொட்டியின் மேல்தளத்தில் இரும்புக்கூண்டு அமைக்கவும் உத்தேச செலவினம் ரூ.200000/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>நகராட்சிப் பகுதியில் 234 தெருக்கள் உள்ளது. இதில் அதிகளவில் குறுகலான தெருக்களாக உள்ளது. இத்தெருக்களில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள கழிவு நீரை உறிஞ்சி எடுப்பதற்கு தேவையான உறிஞ்சிக்குழாய்கள் கொள்முதல் செய்வதற்கும் மற்றும் கழிவுநீர் தொட்டியின் மேல்தளத்தில் இரும்புக்கூண்டு அமைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதியினை பின்பற்றி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. |
| 16.10.2025 | 680 | **<u>மன்றப் பொருள். 33</u>**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரைகளின்படி, தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் களக்காடு நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு குடிநீர் சிக்கனம், மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பு, தூய்மை சேவை, இல்லம் தேடி அரசு சேவை, டெங்கு நோய் ஒழிப்பு, மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்தளித்தல், திறந்தவெளியில் மலம், ஜலம் கழித்தலை தடுத்தல், தனிநபர் கழிப்பறையை பயன்படுத்துதல், நெகிழிப் பைகளை தவிர்த்து மஞ்சப்பைகளை பயன்படுத்துதல் ஆகியவை குறித்து சிவசக்தி கிராமிய கலைக்குழு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த கலை நிகழ்ச்சிகளுக்கு தொகை ரூ.10,000/–ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. | அலுவலகக் குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு</u>:<br>நகராட்சிப் பகுதியில் சிவசக்தி கிராமிய கலைக்குழு மூலம் தூய்மை பாரத இயக்கம் குறித்து புதிய பேருந்து நிலையம் மற்றும் அண்ணாசாலை ஆகிய இரண்டு பகுதிகளில் கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்கு தொகை ரூ.10,000/-ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>681</td>
<td><u>மன்றப் பொருள். 34</u><br>களக்காடு நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்கள் தத்தமது வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்து கீழ்கண்டவாறு கோரிக்கை செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலைனைக்கும் இப்பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வார்டு எண்.</th><th>மேற்கொள்ளப்பட வேண்டிய பணி</th><th>உத்தேச மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>3</td><td>வார்டு எண்.03, கீழப்பத்தையில் பெருமாள் சன்னதி தெற்கு தெருவில் உள்ள கழிப்பிடத்தின் சின்டெக்ஸ் டேங்கினை புதிதாக மாற்றி அமைத்தல்.</td><td>0.30</td></tr>
<tr><td>2.</td><td>5</td><td>வார்டு எண்.05, ஓதுவார் தெருவிற்கு தென்புறம் உள்ள புதிய தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல், மற்றும் முப்பிடாதியம்மன் கோவில் கீழ்புறமுள்ள கழிவு நீரோடை சீரமைப்பு பணி.</td><td>9.00</td></tr>
</table></td>
<td>நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று அலுவலக குறிப்பின்படி, பொது நிதி இருப்பினை பொறுத்தும், அரசின் நலத்திட்டத்திற்கு கருத்துருக்களை சமர்ப்பித்தும் விரைந்து பணிகளை முடிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 3. | 6 | வார்டு எண்.06, ரைஸ்மில் தெருவில் உள்ள மண் சாலையினை பேவர் பிளாக் சாலையாக அமைத்தல். | 30.00 | |
| | | 4. | 6 | வார்டு எண்.06, தென்கரை தெருவில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி. | 16.00 | |
| | | 5. | 7 | வார்டு எண்.07, களக்காடு முதல் சேரன்மகாதேவி செல்லும் பிரதான சாலையில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் சுற்றி சீரமைத்து பேவர் பிளாக் அமைத்தல் பணி. | 1.20 | |
| | | 6. | 8 | வார்டு எண்.08, இந்திரா நகர் பகுதியில் வாறுகால் அமைக்கும் பணி. | 8.50 | |
| | | 7. | 8 | வார்டு எண்.08, கருத்தான் தெருவில் சாலை அமைக்கும் பணி. | 17.00 | |
| | | 8. | 9 | வார்டு எண்.09, முஸ்லீம் நடுத்தெருவில் மழை நீர்வடிகால் அமைத்தல். | 11.00 | |
| | | 9. | 17 | வார்டு எண். 17, பெரிய கோவில் தென்புறம் வாறுகால் மற்றும் பழுதடைந்த சின்டெக்ஸ் டேங்க் சரிசெய்தல், புதிதாக 5 எண்ணம் தெருவிளக்குகள் அமைத்தல். | 2.50 | |
| | | 10. | 19 | வார்டு எண்.19, முஸ்லீம் தெற்கு தெரு, சேனையர் தெரு மற்றும் அண்ணா சாலையில் உள்ள வாறுகால் சீரமைப்பு மற்றும் முஸ்லீம் தெற்கு ஒட்டகம் மார்க் வீட்டு முன்பு சாலை சீரமைப்பு ஆகிய பணிகள். | 25.00 | |

| | | | |
|---|---|---|---|
| 11. | 22 | வார்டு எண்.22, தோப்பு தெரு மேல்புறம் மணிகண்டன் வீட்டிற்கு கீழ்புறம் கழிவு நீர் கால்வாய் மற்றும் தோப்பு தெரு, தங்கம்மன் கோவில் தெரு ஆகியவற்றில் கழிவு நீர் கால்வாய் அமைத்தல் பணி. | 30.00 |
| 12. | 24 | வார்டு எண்.24, சிதம்பராபுரம் வடக்கு ரதவீதியில் வாறுகால் அமைத்தல் பணி. | 7.00 |
| 13. | 25 | வார்டு எண்.25, சிதம்பராபுரம் தெற்கு ரதவீதி அய்யா கோவில் முன்பாக உள்ள நான்கு சாலைகளையும் சீரமைக்கும் பணி. | 23.00 |
| 14. | 26 | வார்டு எண்.26, காவல் தெருவில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி. | 18.00 |
| 15. | 26 | வார்டு எண்.26, தெற்கு தெருவில் உள்ள களந்தை ஜின்னா பூங்கா சீரமைப்பு செய்யும் பணி. | 5.00 |
| 16. | 27 | வார்டு எண். 27, அடப்பு தெருவில் தடுப்புசுவர் அமைக்கும் பணி. | 9.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மேற்கண்டவாறு நகர்மன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட பணிகளை இந்நகராட்சி பொதுநிதியின் இருப்பினை பொறுத்து ஒன்றன்பின் ஒன்றாக குறைந்த மதிப்பீட்டிலான பணிகளை உடனடியாகவும், பெரும் மதிப்பீட்டிலான பணிகளை அரசின் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளும் வகையில் கருத்துருக்களை சமர்ப்பித்து நிதி பெற்ற பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 16.10.2025 | 682 | **<u>மன்றப் பொருள். 35</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் புதிய தெருவிளக்குகள் அமைக்க நகர்மன்ற உறுப்பினர்களால் கோரிக்கை செய்யப்பட்டுள்ளதால் முதற்கட்டமாக அனைத்து வார்டுகளுக்கும் தலா நான்கு தெருவிளக்குகள் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதியினை பின்பற்றி செயல்பட மன்றம் அனுமதி அளிக்கின்றது. |
| 16.10.2025 | 683 | **<u>மன்றப் பொருள். 36</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 22 எண்ணம் கொண்ட பேருந்து நிலைய கடைகளை மாத வாடகை முறையில் குத்தகைக்கு ஒப்படைத்தல் தொடர்பாக 12.08.2025 அன்று பொது ஏலம் / மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அவற்றில் தினமணி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ரூ.15,687/–ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதியின்படி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 16.10.2025 | 684 | **<u>மன்றப் பொருள். 37</u>**<br>களக்காடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாப்பு, விற்பனை ஒழுங்கு முறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015, விதி எண் 9 (1) ன் படி வியாபார பகுதி, வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி ஆகிய பகுதிகளில் வியாபாரம் செய்யும் சாலையோர வியாபாரிகள் களக்காடு நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.<br>மேற்கண்ட விற்பனைக்கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின் படியாகும். | அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. |

| வ. எண். | சாலையோர விற்பனை யாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் (விதி எண். 9(1)–ன் படி |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனை யாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதிம் - வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் - வருடத்திற்கு ரூ.3000/–க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனை யாளர் (பகுதிநேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் - வருடத்திற்கு 375/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதிம் - வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனை யாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 4. | நடமாடும் விற்பனை யாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/– |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>5.</td><td>நடமாடும் விற்பனை யாளர் (தலைசுமை )</td><td>–</td><td>வருடத்திற்கு ரூ.250/–</td></tr>
</table>
மேற்கண்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாப்பு, விற்பனை ஒழுங்கு முறை மற்றும் உரிமம் வழங்குதல் ) திட்டம் 2015, விதி எண். 9 (2)–ன்படி விற்பனைக் கட்டணம் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி நிர்ணயிக்கப்படும் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக் கட்டணம் உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என விதிமுறைகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br><br>
மேற்கண்டவாறு சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில் 2015–ம் வருடத்திய சாலையோர வியாபாரிகளிடமிருந்து மேற்கண்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாப்பு, விற்பனை ஒழுங்கு முறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்ட விதிமுறைகள் மற்றம் நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனைக் கட்டணம் வசூலிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.336/2024/எப்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>685</td>
<td>
<u>மன்றப் பொருள். 38</u><br>
களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0–ன் மூலம் கழிவுநீர் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது கசடு கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் (STP, FSTP) நடைபெற்று வருகிறது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. நகராட்சிப் பகுதியில் உள்ள கழிவுநீர், செப்டிக் டேங்க் கழிவுகளை கழிவுநீர் வாகனத்தில் சேகரித்து சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதால், மேற்படி வாகனத்தை இயக்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் மின்னஞ்சல் செய்தி மற்றும் புதிய பணி விதிகளின்படியும் தேவையான பணியிடத்திற்கு சுய உதவிக்குழு மூலம் ஆட்கள் தேர்வு செய்து பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கழிவுநீர் லாரி ஓட்டுனர்
</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒரு நபர் மற்றும் உதவியாளர் ஒரு நபர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி பட்டியல்படி ஓட்டுநருக்கு ரூ.670/-ம், உதவியாளருக்கு ரூ.520/-ம் வழங்கவும், மேற்படி ஊதிய செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி விகிதத்திற்குட்பட்டு ஊதியம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.10.2025 | 686 | **<u>மன்றப் பொருள். 39</u>**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான கடைகள் வியாசராஜபுரம் அண்ணாசாலை பொதுப்பணித்துறை அலுவலகம் அருகிலுள்ள கடைகள் மற்றும் ஜவஹர் வீதி தெருவிலுள்ள பழைய அலுவலகத்தில் அமைந்துள்ள கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.10.2025 தேதி அன்று கோரப்பட்டது.<br>மேற்கண்ட ஏலத்தில் பழைய அலுவலகத்தில் அமைந்துள்ள கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. வியாசராஜபுரம் பொதுப்பணித்துறை அலுவலகம் அருகில் அமைந்துள்ள 16 கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர். மேற்படி கடைகளுக்கு அரசு மதிப்பு ரூ.6000/- என நிர்ணயம் செய்யப்பட்டு பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு. | உரிய ஏல விதிமுறைகளை பின்பற்றியும், கடை எண்.2, 3, 10, 14 மறு ஏலம் விடுவதற்கு அரசு விதிப்படி செயல்பட மன்றம் அனுமதி அளிக்கின்றது. |

| வ. எண். | கடை எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் | வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | திரு. துரைப்பாண்டி | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.துரைப்பாண்டி அவர்கள் ரூ.10000/- உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக கேட்டுள்ளார். |
| 2. | | திரு. முருகன் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 3. | 2 | திரு.அபுபக்கர் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.அபுபக்கர் அவர்கள் ஒரு நபர் மட்டும் ஏலத்தொகை ரூ.6100/- கேட்டுள்ளார். |
| 4. | 3 | திரு.அண்ணாத்துரை | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு. அண்ணாத்துரை அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.8300/- கேட்டுள்ளார். |
| 5. | | திரு.முகம்மது ரஷீத் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 6. | | திரு.வினோத் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 7. | 4 | திரு.சேக்பாவாசா | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.சீமான்துரை அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6300/- கேட்டுள்ளார். |
| 8. | | திரு.சீமான்துரை | 1,00,000/- | கோரப்படவில்லை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | 5 | திரு.பிச்சமுத்து | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.தனபால் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10700/- கேட்டுள்ளார். |
| 10. | | திரு.தனபால் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 11. | | திரு.அலாவுதீன் பாஷித் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 12. | 6 | திரு.சேக்பீர்முகம்மது | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.பாஸ்கர் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15000/- கேட்டுள்ளார். |
| 13. | | திரு.பிரேசன் பால்துரை | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 14. | | திரு.பலவேசம் | 1,00,000/- | ஒப்பத்தப் புள்ளி தொகை ரூ.5700/- கோரப்பட்டது | |
| 15. | | திரு.பாஸ்கர் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 16. | | திரு.முருகதாஸ் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 17. | | திரு.சேக்அலி பாதுஷா | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 18. | | திரு.அருள் ஞானம் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 19. | | திரு.ராஜேஷ் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 20. | | திரு.ஜார்ஜ் வில்சன் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 21. | | திரு.ராஜசெல்வி | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 22. | 7 | திரு.காட்வின் ஜெபதுரை | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.கணேசன் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.18500/- |
| 23. | | திரு.ஜவஹர் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 24. | | திரு.ஆதிமூலம் | 1,00,000/- | கோரப்படவில்லை | |
| 25. | | திரு.செல்வன்சந்தியாகர் | 1,00,000/- | கோரப்படவில்லை | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 26. | | திரு.கணேசன் | 1,00,000/- | ஒப்பத்தப் புள்ளி தொகை ரூ.12000/- கோரப்பட்டது. | கேட்டுள்ளார். | | |
| | | | 27. | | திரு.அசாருதீன் | 1,00,000/- | கோரப்படவில்லை | | | |
| | | | 28. | | திரு.சங்கர் ராஜா | 1,00,000/- | ஒப்பத்தப் புள்ளி தொகை ரூ.18500/- கோரப்பட்டது. | | | |
| | | | 29. | 8 | திரு.ஆதிசங்கர் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.கதிரவன் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.8100/- கேட்டுள்ளார். | | |
| | | | 30. | | திருமதி.கற்பகம் | 1,00,000/- | ஒப்பத்தப் புள்ளி தொகை ரூ.4800/- கோரப்பட்டது. | | | |
| | | | 31. | | திரு.கதிரவன் | 1,00,000/- | கோரப்படவில்லை | | | |
| | | | 32. | 9 | திரு.ஈஸ்வரன் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.காலித் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.6100/- கேட்டுள்ளார். | | |
| | | | 33. | | திரு.தியாகராஜன் | 1,00,000/- | கோரப்படவில்லை | | | |
| | | | 34. | | திரு.காலித் | 1,00,000/- | கோரப்படவில்லை | | | |
| | | | 35. | 10 | திரு.பக்கீர் முகைதீன் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.பக்கீர் முகைதீன் அவர்கள் ஒரு நபர் மட்டும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.6300/- கேட்டு | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | ள்ளார். | | |
| | | | 36. | **11** | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் ஏலதாரர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | | | |
| | | | 37. | **12** | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் ஏலதாரர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. | | | | | |
| | | | 38. | **13** | திரு. சுரேஷ் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.சுரேஷ் அவர்கள் ஒரு நபர் மட்டும் ஏலத் தொகை ரூ.6500/- கேட்டுள்ளார். | | |
| | | | 39. | **14** | திரு.ஜெயராம் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு. ஜெயராம் அவர்கள் ஒரு நபர் மட்டும் ஏலத் தொகை ரூ. 6500/- கேட்டுள்ளார். | | |
| | | | 40. | **15** | திரு.ராஜேஸ் | 1,00,000/- | கோரப்படவில்லை | திரு.செல்வக்குமார் அவர்கள் ஒரு நபர் மட்டும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.8600/- கேட்டுள்ளார். | | |
| | | | 41. | | திரு.செல்வக்குமார் | 1,00,000/- | கோரப்படவில்லை | | | |
| | | | 42. | **16** | திரு.பாக்கியராஜ் | 1,00,000/- | ஒப்பத்தப் புள்ளி தொகை ரூ.10000/- கோரப்ப | திரு.சூசை அந்தோணி அவர்கள் ஒரு நபர் | | |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td rowspan="4"></td><td></td><td></td><td>ட்டது</td><td rowspan="4">மட்டும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15000/- கேட்டுள்ளார்.</td></tr>
<tr><td>43.</td><td>திரு.சக்திகுமரன்</td><td>1,00,000/-</td><td>கோரப்படவில்லை</td></tr>
<tr><td>44.</td><td>திரு.சுந்தரகிருஷ்ணன்</td><td>1,00,000/-</td><td>கோரப்படவில்லை</td></tr>
<tr><td>45.</td><td>திரு.சூசை அந்தோணி</td><td>1,00,000/-</td><td>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.12000/- கோரப்பட்டது.</td></tr>
</table>
மேற்கண்ட கடை உரிமத்திற்காக உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கு கடை உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் கடை எண்கள். 2, 13, 14 ஆகிய கடைகளுக்கு ஏலதாரர் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலத்தொகை கோரப்பட்டுள்ளதால், அக்கடைகளை மறு ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
அதிகபட்சமான ஏலக்கேள்வி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.10.2025</td>
<td>687</td>
<td><u>மன்றப் பொருள்: 40</u><br>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்திற்கான பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணிகளால் அவ்வப்போது பகிர்மான குழாய்கள் மற்றும் விநியோகக் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வழங்கல் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் விதமாகவும், சீரான குடிநீர் அனைத்து வார்டுகளுக்கும் வழங்கும் பொருட்டும், நகராட்சிக்கு சொந்தமாக 6000 லி கொள்ளளவு கொண்ட டேங்கருடன் கூடிய டிராக்டர் ஒன்று கொள்முதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அரசு விதிப்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் வரவு தலைப்பின் கீழ் மேற்கொள்ள ஒப்புக் கொள்ளலாம். | |